**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**TAMIL VIRTUAL ACADEMY**

**மேற்சான்றிதழ்க் கல்வி** (Higher Certificate Course)
**HG10 – நிலை I – (Grade 1)**

**நேரடி எழுத்துத் தேர்வு** (Written Examination)

**மே – சூன் 2019**

**நேரம் : 2.30 மணி** **மதிப்பெண் : 75**

**பகுதி – அ**

**I. எல்லா வினாக்களுக்கும் ஒரு சொல் / தொடரில் விடை தருக.**
***Answer all questions in a word / line.*** **(10x1 = 10)**

1. அருள் மணம் வீசுபவர் யார்?
2. ஆண்டாள் யாரைப் போற்றினார்?
3. தீயவர் நட்பு எதைப் போன்றது?
4. கல்வி எதை அழகுப்படுத்தும்?
5. சர்.சி.வி. இராமன் இந்திய அரசின் எத்துறையில் முதலில் வேலைக்குச் சேர்ந்தார்?
6. காஞ்சிபுரத்தில் உள்ள பெருமாள் கோயில் பெயர் என்ன?
7. தமிழ்மொழியைப் போற்றும் நூல் எது?
8. வாழைமரத்தின் உடல் பகுதிக்கு என்ன பெயர்?
9. தலைக்கு ஒரு மாம்பழம் கொடு – என்ன பெயர்?
10. வேற்றுமை மொத்தம் எத்தனை?

**பகுதி – ஆ**

**II. எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை தருக.**
***Answer any ten questions in three lines each.*** **(10x2=20)**

1. பண்புடையாளர் நட்பு எதனைப் போன்றது?
2. குளிர்ந்த பொய்கையில் என்னென்ன இருந்ததாக திருநாவுக்கரசர் கூறுகிறார்?
3. சீறாப்புராணம் யாருடைய வரலாற்றைக் கூறுகிறது?
4. பாரதியாரை மக்கள் எவ்வாறு அழைப்பர்?
5. புதுக்கவிதை என்றால் என்ன?
6. பாரதிதாசன் இயற்றிய நூல்களுள் இரண்டன் பெயர்களைத் தருக.
7. எந்தெந்த அடிப்படையில் தமிழ் பழமையான சிறந்த மொழி எனலாம்?
8. தமிழ்நாட்டில் முக்கனிகள் எனப்படுபவன யாவை?
9. காஞ்சிபுரத்திற்கு உள்ள இரண்டு சிறப்புகள் யாவை?
10. சர்.சி.வி. இராமன் கற்ற துறைகள் எவை?
11. உயிர்மெய் எழுத்து என்றால் என்ன? அது எத்தனை வகைப்படும்?
12. வினையெச்சங்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

13. எதிர்காலத்தின் இடைநிலைகள் யாவை?
14. வேற்றுமை என்பது என்ன?
15. இட ஆகுபெயர் என்றால் என்ன? எ.கா. தருக.

### பகுதி – இ

**III.** **எவையேனும் <u>ஐந்து வினாக்களுக்கு</u> ஒவ்வொன்றிற்கும் <u>ஆறு வரிகளில்</u> விடை தருக.**
***Answer any five questions in six sentences each.*** **(5x4=20)**

1. எவற்றை அபிராமியின் கடைக்கண்கள் தரும் என்று அபிராமி பட்டர் கூறுகிறார்?
2. பாரதியாரின் முப்பெரும் பாடல்கள் என்பன யாவை?
3. தமிழ்மொழி உதவியால் பயன்பெறும் மொழிகள் யாவை?
4. வாழை இலை பற்றி நீ அறிந்தவற்றை எழுதுக.
5. காஞ்சிபுரத்தில் உள்ள பகுதிகள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?
6. சர்.சி.வி. இராமன் ஆசிரியராக முதலில் வேலைக்குச் சேர்ந்ததைப் பற்றி விளக்குக.
7. மரபுக்கவிதை என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?
8. புணர்ச்சியின் வகைகள் யாவை? அவற்றை விளக்கி உதாரணம் தருக.

### பகுதி – ஈ

**IV.** **ஏதேனும் <u>ஒன்றனுக்குப் பதினைந்து வரிகளில்</u> விடை தருக.**
***Answer any one of the following questions in fifteen sentences.*** **(1x10=10)**

1. பாரதியாரின் வாழ்க்கை வரலாற்றைக் கூறுக.
2. வாழைமரத்தில் உள்ள பகுதிகள் யாவை? அவை எவ்வாறு பயன்படுகிறது என்பதை விளக்குக.
3. பெயர்ச் சொல் என்றால் என்ன? அதன் வகைகளை உதாரணம் கூறி விளக்குக.

### பகுதி – உ

**V.** **ஏதேனும் <u>ஒன்றனுக்கு மூன்று பக்கக்</u> கட்டுரை வடிவில் விடை தருக.**
***Write an essay in three pages to any one of the questions.*** **(1x15=15)**

1. "படித்ததோடு இருந்து விடாதே" என்ற பாடல் வழியே பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
2. சர்.சி.வி. இராமனின் வாழ்க்கை வரலாற்றினைத் தொகுத்து எழுதுக.